இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 02 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆடி 26 – செவ்வாய்க்கிழமை 11 ஆகஸ்ட் 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 02 : Thiruvalluvar Year - 2057 - Aadi 26 - Tuesday 11 August 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00

## த.வெ.க. அரசை பின்னணியிலிருந்து இயக்குவது யார்? தொகுதி மறுவரையறை:

# காங்கிரசை காப்பாற்றவே எம்.பி.க்கள் கூட்டம்!

## கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. காட்டமான பேட்டி!



**சென்னை, ஆக.11-**

**கழகத் துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி நேற்று முன்தினம் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், “த.வெ.க. அரசை பின்னணியிலிருந்து இயக்குவது யார்” என்றும் “காங்கிரசை காப்பாற்றவே எம்.பி.க்கள் கூட்டம்” என்றும் காட்டமாக கூறியுள்ளார்.**

சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

தமிழ்நாடு அரசின் சார்பில் முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் தொகுதி மறுவரையறை குறித்து அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர் கூட்டத்தை கூட்டியிருக்கிறார். அந்தக் கூட்டத்தில் பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள்கலந்துகொள்ளாதநிலையிலேயே அக்கூட்டம் நடத்தப்பட்டிருக்கிறது. இந்தக் கூட்டம் நடத்துவதற்கான அடிப்படைக் காரணம் என்ன என்பது தெளிவாக இல்லை. ஏனென்றால், இதேபோன்ற ஒரு கூட்டத்தை எங்களுடைய கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின் முதலமைச்சராக இருந்தபோது, 5/3/2025 அன்று நடத்தியிருக்கிறார்கள்.

தொகுதி மறுவரையறை குறித்து அனைத்துக் கட்சிகளின் கருத்துகளையும் தெரிந்துகொள்வதற்காக, அவர் முதலமைச்சராக இருந்தபோது ஒரு கூட்டத்தை நடத்தினார். அந்தக் கூட்டத்தில் த.வெ.க. சார்பில், இன்று அமைச்சராக இருக்கக்கூடிய அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ஆனந்த் கலந்துகொண்டு, அங்கே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஏற்றுக்கொண்டு கையெழுத்திட்டிருக்கிறார்.

அந்தத் தீர்மானங்களின் அடிப்படையிலே, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, அத்தனை கட்சிகளும், பா.ஜ.க.வைத் தவிர மற்ற கட்சிகள் அனைத்தும் ஏற்றுக்கொண்ட ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்திற்கும், இன்றைக்கு நடைபெற்றிருக்கக் கூடிய இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்டிருக்கக்கூடிய முடிவுகளுக்கும் என்ன வித்தியாசம் என்பதை நாங்கள் தெரிந்து கொள்ள விரும்புகிறோம்.

### தமிழ்நாட்டின் உரிமைகளே முக்கியம் என்றார் எங்கள் தலைவர்!

முதன்முதலில் இந்த தொகுதி மறுவரையறை குறித்த பேச்சு வந்தபோதே, எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், அப்போதைய முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின், ஐந்து மாநில முதலமைச்சர்கள், மற்ற கட்சிகளின் தலைவர்களை எல்லாம் அழைத்து தொகுதி மறுவரையறையால் பாதிக்கப்படக்கூடிய அத்தனை மாநிலங்களில் இருந்தும் அனைவரையும் அழைத்து சென்னையிலேயே ஒரு கூட்டத்தை நடத்தினார். அந்தக் கூட்டத்திலேயும் கலந்துகொண்ட முதலமைச்சர்கள், அந்தத் தீர்மானங்களை ஏற்றுக்கொண்டு கையெழுத்திட்டிருக்கிறார்கள்.

அந்தக் கூட்டத்தில் ‘ஃபேர் டீலிமிடேஷன்’ என்பதுதான் முக்கியமாக வலியுறுத்தப்பட்டது. தொகுதி மறுவரையறையை நாங்கள் முற்றிலுமாக எதிர்க்கவில்லை. நியாயமான ஒரு தொகுதி மறுவரையறை நடைபெற வேண்டும் என்பதுதான் அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவாகவும், தீர்மானமாகவும் இருந்தது. அதில் கலந்துகொண்ட அத்தனை பேரும் ஒருமனதாக கையெழுத்திட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் தாண்டி, தேர்தல் நேரத்தில் தொகுதி மறுவரையறை கொண்டுவரப்பட்டபோது, தேர்தல் உச்சத்தில் இருந்த அந்த நேரத்தில்கூட, முதலமைச்சராக இருந்த மு.க.ஸ்டாலின் எங்களுக்கு தேர்தல் முக்கியம் இல்லை; தமிழ்நாட்டின் உரிமைகள் தான் முக்கியம். நாம் பாதிக்கப்படக் கூடாது என்ற ஒரு முடிவோடு அந்தப் பிரச்சாரத்தை கையில் எடுத்தார்.

### நாடாளுமன்றத்தில் மசோதாவை முறியடித்தோம்!

அதுமட்டுமில்லாமல், தேர்தல் பணியில் இருக்கக்கூடிய அத்தனை நாடாளுமன்ற உறுப்பினர்களையும், நீங்கள் போய் அந்தத் தீர்மானத்திற்கு எதிராகக் கொண்டுவரக்கூடிய மசோதாவிற்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என்று எங்கள் அனைவரையும் அனுப்பி, முதல் முதலாக பா.ஜ.க. ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு அவர்கள் கொண்டுவந்த ஒரு மசோதா முறியடிக்கப்பட்டது என்றால், அது திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற இயக்கங்கள் எதிர்த்த தொகுதி

## யார் எட்டப்பர் என்று மக்களுக்கு தெரியும்!

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## ஆவின் பால் தட்டுப்பாடு!

### சென்னையில் மக்கள் அவதி!

சென்னை,ஆக.11-

சென்னை உள்பட தமிழகம் முழுவதும் ஆவின் பால் தட்டுப்பாடு நிலவி வருகிறது. கடைகளுக்கு பால் பாக்கெட் சப்ளை அளவு குறைக்கப் பட்டதால் பொதுமக்கள் தங்களுக்கு தேவையான அளவுக்கு பால் கிடைக்காமல் அவதியடைந்து வருகின்றனர்.

தமிழ்நாடு அரசின் சொந்த நிறுவனமான ஆவின், பால் மற்றும் பால் பொருட்களை குறைந்த விலையில் வழங்கி வருகிறது. இந்நிலையில் சென்னை உள்பட தமிழகம் முழுவதும் ஆவின் பால் தட்டுப்பாடு நிலவி வருவதாக பொது மக்கள் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

காலை நேரத்திலேயே பல பகுதிகளில் பால் பாக்கெட்டுகள் கிடைப்பதில்லை என்று கூறுகின்றனர். தினமும் ஆவின் பாலை நம்பியிருக்கும் நடுத்தர, ஏழைக் குடும்பங்கள், குழந்தைகள், முதியவர்கள் மற்றும் தேநீர்க் கடை உரிமையாளர்கள் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.

முன்னர் ஒரு ஆவின் விற்பனை நிலையத்திற்கு 32 பெட்டிகள் பால் வழங்கப்பட்டு வந்த நிலையில், தற்போது அது 20 பெட்டிகளாகக் குறைக் கப்பட்டுள்ளது என்று வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக, குறிப்பாக பச்சை நிற பால் பாக்கெட்டுகளுக்கு (500 மி.லி.ரூ.22) தேவை அதிகமாக இருந்தும் தட்டுப்பாடு தீவிரமடைந்துள்ளது.

இதனால் வாடிக்கையாளர்களுக்கு அதிகபட்சம் 5 பால் பாக்கெட்டுகள் மட்டுமே வழங்கப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அதேபோல பால் தரம் குறைந்துவிட்டதாகவும் நுகர்வோர் குற்றம் சாட்டுகின்றனர்.



இதனால், வழக்கமாக ஆவின் பாலை நம்பியிருந்த குடும்பங்கள் தனியார் நிறுவனங்களின் பாலை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

நடுத்தர, ஏழைக் குடும்பங்கள் அதிகம் நம்பியிருப்பது ஆவின் பாலையே என்பதால், விநியோகம் படிப்படியாகக் குறைக்கப்படுவது அவர்களை மிகுந்த அவதிக்கு உள்ளாக்கியுள்ளதாக சமூக ஆர்வலர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஆவின் பால் கொள்முதல் விலையை உடனடியாக உயர்த்தி, விவசாயிகளை மீண்டும் ஈர்த்து, கொள்முதல் அளவை அதிகரிக்க வேண்டும் என்பதே பொதுமக்களின் முதன்மைக் கோரிக்கையாக உள்ளது. இதன் மூலம் மட்டுமே தட்டுப்பாடின்றி, குறைந்த விலையில் தரமான பால் அனைவருக்கும் கிடைக்கும் நிலை உறுதி செய்யப்படும் என வர்த்தகர்களும், நுகர்வோர் அமைப்புகளும் அரசிடம் வலியுறுத்தி வருகின்றனர்.

## காவிரி நீர் - மேகதாது விவகாரம்:

# நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும்!

### மக்களவையில் டி.ஆர். பாலு – மாநிலங்களவையில் திருச்சி சிவா மீண்டும் நோட்டீஸ்!

புதுடெல்லி,ஆக.11-

காவிரி நீர் விவகாரம் - மேகதாது அணை தொடர்பாக மக்களவையில் விவாதிக்கக்கோரி கழகக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு அவர்களும், மாநிலங்களவையில் கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா ஆகியோர் நேற்று மீண்டும் ஒத்திவைப்பு தீர்மான நோட்டீஸ் அளித்துள்ளார்.

தமிழ்நாடு மற்றும் கர்நாடகா இடையேயான காவிரி நதிநீர் பங்கீட்டை நிர்வகிப்பதற்காக உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின்படி காவிரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி ஒழுங்காற்றுக் குழு ஆகியவை அமைக்கப்பட்டன.

அதன்படி, கடந்த ஜூலை 28ஆம் தேதி காவிரி ஒழுங்காற்றுக் குழு கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்தின்போது, தமிழ்நாட்டிற்கு 15 நாட்களுக்கு காவிரியில் விநாடிக்கு 3,500 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடுமாறு கர்நாடக அரசிற்கு காவிரி ஒழுங்காற்றுக் குழு பரிந்துரை செய்தது. அதை ஏற்றுக்கொண்டு காவிரி நீர் மேலாண்மை ஆணையமும் தமிழ்நாட்டுக்கு தண்ணீர் திறந்துவிட உத்தரவு பிறப்பித்தது.

இதற்கு முன்னதாக நடைபெற்ற காவிரி நீர் மேலாண்மை ஆணைய கூட்டத்திலும் தமிழ்நாடு அரசிற்கு, கர்நாடக அரசு தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று பரிந்துரை செய்யப்பட்டது. ஆனால், கர்நாடக அரசு தொடர்ந்து காவிரி ஒழுங்காற்றுக் குழு மற்றும் காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் உத்தரவுகளை நிராகரித்து வந்தது.

இந்நிலையில், காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் உத்தரவை கர்நாடக அரசு அமல்படுத்தாதது தொடர்பாக மக்களவையில் விவாதிக்க அனுமதிக்கக்கோரி, மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு மக்களவையில் மீண்டும் ஒத்திவைப்பு தீர்மான நோட்டீஸை அளித்தார்.

அதில், “காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவுப்படி தமிழ்நாட்டிற்கு கர்நாடக அரசு தண்ணீர் திறந்துவிடவில்லை. இதனால், தமிழ்நாட்டில் குறுவை சாகுபடி கடுமையாக பாதிக்கப்பட்டு, டெல்டா மாவட்டங்களைச் சேர்ந்த லட்சகணக்கான விவசாயிகள் பெரும் நெருக்கடியில் உள்ளனர். டெல்டா மாவட்ட விவசாயிகள் தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும், மேகதாது அணைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் காவிரி நீர் பிரச்சினை தீவிரமடையும். இந்த அவசர மற்றும் பொதுமக்கள் நலன் சார்ந்த முக்கிய பிரச்சினையை மக்களவையின் வழக்கமான அலுவல்களை ஒத்திவைத்து உடனடியாக விவாதிக்க அனுமதி வழங்க வேண்டும்” என்று கோரியுள்ளார்.

இதேபோல் மாநிலங்களவையிலும் விவாதிக்கக்கோரி கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா நோட்டீஸ் கொடுத்துள்ளார்.

## சென்னை உயர்நீதிமன்றத்தில்

# 15 புதிய நீதிபதிகள்!



சென்னை,ஆக.11-

சென்னை உயர் நீதிமன்றத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள 15 நீதிபதிகளின் பதவியேற்பு விழா நேற்று நடைபெற்றது. சென்னை ஐகோர்ட்டுக்கு 15 புதிய நீதிபதிகளை நியமித்து ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தார். இவர்கள் அனைவரும் இன்று பதவி ஏற்றனர். உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள கூட்டரங்கில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், புதிதாக நியமிக்கப்பட்ட 15 நீதிபதிகளுக்கு தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

சென்னை உயர் நீதிமன்றத்தில் காலியாக உள்ள நீதிபதி பணியிடங்களை நிரப்பும் வகையில், உச்ச நீதிமன்ற கொலீஜியம் பரிந்துரைத்த பட்டியலில் இருந்து 15 பேரை நீதிபதிகளாக நியமித்து குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு உத்தரவிட்டிருந்தார். இதன் தொடர்ச்சியாக இந்த பதவியேற்பு விழா நடைபெற்றுள்ளது.15 நீதிபதிகள் பதவியேற்ற நிலையில், உயர்நீதிமன்ற நீதிபதிகள் எண்ணிக்கை 66ஆக உயர்ந்துள்ளது. காலியிடங்கள் 9ஆக குறைந்துள்ளது.

நியமிக்கப்பட்டுள்ள 15 பேரில், கே.கோவிந்தராஜன், ரஜனீஷ் பத்தியால், என்.ரமேஷ், ஜி.கே. முத்துக்குமார், ஆர்.ஆர். விவேகானந்தன், எஸ்.ரவிக்குமார், என். திலீப்குமார், ஏ.மனோகரன் ஆகிய 8 வழக்கறிஞர்களும், பி.முருகன், எம்.டி.சுமதி, எஸ்.அல்லி, சி.திருமகள் சந்திரசேகர், எஸ். கார்த்திகேயன், பி. முருகேசன், என்.குணசேகரன் ஆகிய 7 மாவட்ட நீதிபதிகளும் அடங்குவர்.

சென்னை உயர் நீதிமன்ற வரலாற்றில் கடந்த 2016ஆம் ஆண்டிற்குப் பிறகு (10 ஆண்டுகளுக்குப் பின்), ஒரே நேரத்தில் 15 நீதிபதிகள் பதவியேற்பது இதுவே முதல் முறையாகும். புதிய நீதிபதிகளின் வருகையால் நிலுவையில் உள்ள வழக்குகளின் விசாரணை வேகம் பெறும் என்றும், நீதித்துறை கட்டமைப்பு மேலும் வலுவடையும் என்றும் வழக்கறிஞர்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

# குலசேகரப்பட்டினம் : ராக்கெட் ஏவுதளத்தை தனியார் வசம் ஒப்படைக்க ஒன்றிய அரசு முடிவு!

## இஸ்ரோ விஞ்ஞானிகள் அதிர்ச்சி – எதிர்ப்பு!

தூத்துக்குடி, ஆக.11-

குலசேகரப்பட்டினத்தில் இஸ்ரோ அமைத்து வரும் ராக்கெட் ஏவுதளத்தின் இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளைத் தனியாரிடம் ஒப்படைக்க ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ரூ.986 கோடியில் அமையும் இந்த ஏவுதளத்தை முழுமையாக நிர்வகிக்கவும், ராக்கெட்டுகளை ஏவுவதற்கான செயல்பாடுகளை மேற்கொள்ளவும் தனியார் நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே முழுக்க முழுக்க நாட்டின் பொதுத்துறை நிதியிலும், இஸ்ரோவின் தொழில்நுட்பத்திலும் உருவாக்கப்பட்டு வரும் இந்த விண்வெளி உள்கட்டமைப்பைத் தனியார் வசம் ஒப்படைக்கும் ஒன்றிய அரசின் இந்த திடீர் முடிவிற்கு, இஸ்ரோ விஞ்ஞானிகள் மற்றும் விண்வெளி ஆர்வலர்கள் மத்தியில் அதிர்ச்சியும், பலத்த எதிர்ப்புகளும் கிளம்பியுள்ளன.

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோவுக்கு ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் மட்டுமே ராக்கெட் ஏவுதளம் அமைந்துள்ளது. அங்குதான் இந்தியாவின் செயற்கைக்கோள்கள் மற்றும் பல்வேறு உலக நாடுகளின் செயற்கைக்கோள்கள் ஏவப்பட்டுள்ளன. பி.எஸ்.எல்.வி, ஜி.எஸ்.எல்.வி, போன்ற ராக்கெட்டுகளின் உதவியோடு விண்ணில் ஏவப்பட்டு வருகின்றன.



நாட்டின் இரண்டாவது ஏவுதளம் அமைப்பதற்காக தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள குலசேகரப்பட்டினம் தேர்வு செய்யப்பட்டது. இங்கு ராக்கெட் ஏவுதளம் அமைக்க 2,233 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது. கடந்த 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தமிழ்நாட்டுக்கு வந்த பிரதமர் நரேந்திர மோடி, இந்தத் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டினார்.

அதனைத் தொடர்ந்து கையப்படுத்தப்பட்டுள்ள இடத்தைச் சுற்றி கருங்கற்களால் தடுப்பு சுவர் அமைக்கும் பணிகள் தீவிரமாக நடந்து வந்தது. தற்போது சுவர் அமைக்கும் பணிகள் முழுமையாக நிறைவு பெற்றுள்ளது. அந்த கருங்கல் கட்டடத்தின் மேல் பாதுகாப்புக்காக இரும்பு கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், குலசேகரப்பட்டினத்தில் அமைக்கப்பட்டு வரும் ராக்கெட் ஏவுதளத்தின் இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளைத் தனியாரிடம் ஒப்படைக்க ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ரூ.986 கோடியில் அமையும் இந்த ஏவுதளத்தை முழுமையாக நிர்வகிக்கவும், ராக்கெட்டுகளை ஏவுவதற்கான செயல்பாடுகளை மேற்கொள்ளவும் தனியார் நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே முழுக்க முழுக்க நாட்டின் பொதுத்துறை நிதியிலும், இஸ்ரோவின் தொழில்நுட்பத்திலும் உருவாக்கப்பட்டு வரும் இந்த விண்வெளி உள்கட்டமைப்பைத் தனியார் வசம் ஒப்படைக்கும் ஒன்றிய அரசின் இந்த திடீர் முடிவிற்கு, இஸ்ரோ விஞ்ஞானிகள் மற்றும் விண்வெளி ஆர்வலர்கள் மத்தியில் அதிர்ச்சியும், பலத்த எதிர்ப்பும், கண்டனமும் கிளம்பியுள்ளன.